செய்தி வெளியீடு எண்: 1 8 5 நாள் : 28. 04. 2015

# மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி தமிழக தாய்சேய் நலப்பணிகளை வளர்ந்த நாடுகளுக்கு இணையாக மேம்படுத்த சிங்கப்பூர் பன்னாட்டு மருத்துவ நிபுணர்களுடன் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது

## தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சுகாதாரம் மற்றும் தாய் சேய் நலத் திட்டங்களுக்கு சிங்கப்பூர் மருத்துவ நிபுணர்கள் பாராட்டு!

---

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் தாய்சேய் நலத்தினை பேணிக்காப்பதற்கு பல்வேறு மகத்தான திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய அளவில் 1000 உயிருள்ள பிறப்புகளுக்கு 40 ஆக இருக்கும் சிசுமரண விகிதம், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நம் தமிழகத்தை உயர்த்தும் உன்னத நோக்கம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்ட வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் சிசுமரண விகிதம் 21 ஆக குறைந்துள்ளது. அவ்வாறே இந்திய அளவில் 1 இலட்சம் உயிருள்ள குழந்தை பிறப்பில் 167 ஆக இருந்து வரும் தாய்மார் இறப்பு வீதம் தமிழகத்தில் 68 என்ற நிலையில் உள்ளது. இறப்பு நிகழ்வுகளை தவிர்க்க சமுதாய ஈடுபாட்டுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும், பல சிறப்பான திட்டங்களும் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்திய அளவில் சுகாதார குறியீடுகளை தமிழகம் ஏற்கனவே அடைந்துவிட்ட நிலையில் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம்–2023ன்கீழ் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தாய் சேய் மரணவிகிதம் இல்லாத நிலையை எட்ட மருத்துவத் துறையில் பல்வேறு தாய் சேய் நலத் திட்டங்கள் நிறைவேற்றபட்டு வருகிறது. மேலும் பல்வேறு புதிய திட்டங்கள் வளர்ந்த நாடுகளுடன் புரிந்துணர்வு ஏற்படுத்தி செயல்படுத்த தமிழ்நாடு மருத்துவத் துறை ஏற்பாடு செய்து வருகிறது.

தாய் சேய் நலத் திட்டத்தினை செயல்படுத்துவதில் சிறந்து விளங்கும் நாடுகளில் ஒன்றான சிங்கப்பூர் நாட்டின் மருத்துவ நிபுணர்கள் குழு தமிழகத்தை பார்வையிட வந்துள்ளது. நல்வாழ்வு திட்டங்கள், உத்திகளை பகிர்ந்து கொள்ளும் சிறப்பு மிகு கூட்டம் சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை அரங்கில் இன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும்

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம் (ரூ.12,000/–)
- 24 மணிநேரமும் செயல்படும் ஒருங்கிணைந்த அவசரப்பேறுகால சிகிச்சை மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு மையம், (Comprehensive Emergency Obstetric and Neonatal Care – CEmONC Centres)
- பச்சிளங் குழந்தைகளை நிலைப்படுத்துதல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளைத் தோற்றுவித்தல், (New Born Stabilization Unit and Neonatal Intensive Care Unit)
- தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து அளிளிக்கும் திட்டம்
- பச்சிளங் குழந்தைகளை தொடர் சிகிச்சைக்காகவும் உயர் சிகிச்சைக்காகவும் எடுத்துச் செல்ல பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 37 பச்சிளம் குழந்தைகளுக்கான சிறப்பு அவசர கால ஊர்திகள் (Neonatal Ambulance)

போன்ற தமிழக அரசு பல சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி வருவதை சிங்கப்பூர் குழுவினர்களிடம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இதுபோன்ற முனைப்பான கண்காணிப்பு நடவடிக்கைகளால் தமிழகத்தில் சிசு மற்றும் தாய் மரண விகிதத்தை மேலும் குறைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழகத்தில் செயல்படுத்தப்படும் தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் சுகாதாரத்தை பேணி காக்கும் பல்வேறு சிறப்பு திட்டங்களை சிங்கப்பூர் மருத்துவக் குழுவினர் வெகுவாக பாராட்டினார்கள்.

மேலும், தமிழநாடு சுகாதாரத் துறையுடன் இணைந்து சுகாதார குறியீட்டில் மேலும் முன்னேற்றம் அடைவதற்கும், பல்வேறு சுகாதார திட்டங்களை பகிர்ந்து நம் நாட்டு அனுபவங்களை அந்நாட்டுடன் பகிர்ந்து கொள்ளவும், அந்நாட்டின் அனுபவங்களை நம் நாட்டுடன் பகிர்ந்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

சென்னையில் உள்ள சிங்கப்பூர் தூதர் (consul-general) திரு. ராஜ்கூ தலைமையில் திரு. ஸ்டான்லி லீ, திரு. அடலைன் டான், திரு. இயான் சென், செல்வி எலைனா நெ செல்வி. மார்கெரெட் தேவராகூம், திரு. அனட்டி ஜேக்கப்சென் மற்றும் விஜய ராவ் ஆகியோர் அடங்கிய இக்குழுவானது திருச்சி அரசு பொது மருத்துவமனை, ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனை மற்றும் இதர சுகாதார நிலையங்களையும் பார்வையிடவுள்ளது.

இக்கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., இ.ஆ.ப., தேசிய ஊரக நலவாழ்வு திட்ட இயக்குநர் டாக்டர் சி.என்.மகேஸ்வரன் இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் டாக்டர். சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் குழந்தைசாமி மற்றும் மருத்துவத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9